
www.tamilarangam.net

# தமிழீழத் தேசியத் தலைவர் - வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சந்திப்பு

விசேட பதிப்பு



05.02.95 ஞாயிற்றுக் கிழமையன்று யாழ்ப்பாணம் வந்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளை, தேசியத் தலைவர் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பில் மேற்குலக நாடுகள், தமிழ்மக்களின் பிரச்சினைகளில் ஆர்வமாக இருப்பதையிட்டு தனது மகிழ்ச்சியினையும், வரவேற்பையும் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் தலைவர் அவர்களுடன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். நோர்வே, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து வந்த நான்கு பிரதிநிதிகளும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பீரிஸ் இந்தச் சந்திப்பின்போது கலந்து கொள்ளவில்லை.

தலைவர் அவர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் பேசும்போது , "மோதல் தவிர்ப்பு உடன்பாட்டைச் செம்மையாகக் கண்காணிக்க நீங்கள் வந்திருப்பதை தமிழீழ மக்கள் சார்பிலும், விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பிலும் நான் வரவேற்கின்றேன்; மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் தாக்குதல் நிறுத்த உடன்பாடு செம்மையாக அமைவதற்கு நீங்கள் நல்லமுறையில் பணியாற்ற வேண்டும். நீங்கள் இங்கு பணியாற்றுவதற்கு முழுமையான ஒத்துழைப்பையும் பாதுகாப்பையும் விடுதலைப் புலிகள் இயக்கம் தரும்" என்று கூறினார்.

"இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் சில பிரச்சினைகள் இருக்கின்றன; இந்தப் பிரச்சினைகள் பற்றி விடுதலைப் புலிகளும், சிறீலங்கா அரசும் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வந்த பின்னர் நீங்கள் அதன் அடிப்படையில் செயற்படலாம். மேற்கத்திய நாடுகள் எங்கள் மக்களின் பிரச்சினைகளில் ஆர்வமாக, அனுதாபமாக இருக்கிறார்கள். இந்த நாடுகளிலிருந்து வந்திருக்கும் உங்கள் நால்வரினதும் சந்திப்பு - இந்தச் சர்வதேச சந்திப்பு எமக்கு மிக மகிழ்ச்சியைத் தருகின்றது " என அவர் மேலும் குறிப்பிட்டார்.

"கனடா, நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இப்படியான சமாதான முயற்சிகளில் பங்களிப்புச் செய்வதை விடுதலைப் புலிகள் மிகவும் வரவேற்கின்றனர்; உறுதியான, நிலையான சமாதானம் தோன்றுவதற்கும், நீடிப்பதற்கும் உங்களது நாடுகளின் ஆக்கபூர்வமான பங்களிப்பு இருக்க வேண்டும். வெளிநாட்டவர்கள் இங்கு அடிக்கடி வந்து எங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, இந்தப் பிரச்சினையை நேரடியாகத் தீர்க்க வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், தாம் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்ததையிட்டு பெருமைப் படுவதாகவும், தலைவர் தம்முடன் நேரடியாக உரையாடுவதையிட்டு தாம் பெரு மகிழ்ச்சி அடைவதாகவும், இது தமக்குக் கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பம் எனவும் கூறி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பிரச்சினை சம்பந்தமாக சமாதானத்தை நோக்கிய தம்மாலான ஆக்கபூர்வமான முயற்சிகளை, தொடர்ந்து மேற்கொள்வோம் எனவும் குறிப்பிட்டனர்.

"உங்கள் தலைவரைச் சந்தித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்; இதை எனக்கு மட்டும் கிடைத்த மகிழ்ச்சியாகவோ, கௌரவமாகவோ கொள்ளவில்லை. எனது நாட்டிற்குக் கிடைத்த கௌரவமாகவே கருதுகின்றேன்" இவ்வாறு யாழ். மாவட்டத்திற்கான கண்காணிப்புக் குழுத் தலைவர் நெதர்லாந்தைச் சேர்ந்த போல் கென்றி (Paul Henry) தெரிவித்துள்ளார். 05.02.95 மாலை தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்து மண்டபத்தை விட்டு வெளியேறிய பிரதிநிதிகளை, எமது செய்தியாளர்கள் சந்தித்தபோதே இக்கருத்தைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், தாக்குதல் நிறுத்தம் என்பது சமாதானத்திற்கு முக்கியமானதென்றும் இதனை இரு தரப்பினரும் கடைப்பிடிப்பார்க

www.tamilarangam.net



ளேயானால், தமது வேலைகள் குறையும் என்றும், எனவே இரு தரப்பினரும் தமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தாம் நம்பிக்கை கொள்வதாகவும் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழு மேலோட்டமாக உள்ள குறிப்புக் களை மட்டும் கொண்டு காண்காணிப்பை நடைமுறைப்படுத்த முடியாது; இதனால் பல சிக்கல்கள் ஏற்படும். ஆகவே இந்த நிலைகளை விபரமாகவும் நடைமுறைக்கு ஏற்றதாகவும் கூடிய சீக்கிரத்தில் தீர்க்கக் கூடியதாகவும் அமைத்தல் வேண்டும். அதனை விடுதலைப் புலிகள் தரப்பினரும், சிறீலங்கா அரச தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்து இது முழுமையாக்கப்பட்டதும் தாம் தமது நடவடிக்கைகளை எந்தத் தாமதமும் இன்றி மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

4 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகள் அனேகமாக அடுத்தவாரம் நடைபெறக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக, அரசு தரப்புப் பேச்சுக்களில் இருதடவைகள் கலந்து கொண்டவரும் இக் கண்காணிப்புக் குழுவிற்குத் தலைமை தாங்கும் வெளிநாட்டு பிரதிநிதிகளோடு ஒருவராக யாழ் வந்தவருமான பிரிகேடியர் பீரிஸ் தெரிவித்தார். உலங்குவானூர்தியில் திரும்பிச் செல்வதற்காக அவர் மைதானத்தில் காத்திருந்தபோது, செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் செயலாளர் பலபத்த பெந்தி, 4 ஆம் கட்டப் பேச்சிற்குத் தலைமை வகிப்பார் எனவும், அனேகமாக அடுத்த வாரம் பேச்சுக்கள் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் பிரதிநிதிகளிலும் மாற்றம் இருக்கும் எனவும் தெரிவித்தார்.

3 ஆம் கட்டப் பேச்சுக்களுக்கும், 4 ஆம் கட்டப் பேச்சுக்களுக்கும் இடையே உள்ள நேரம் பல காரணங்களினால் நீடித்ததாகவும், இந்த நிலை இனிமேல் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் குறையும் என்றும், நான் அறிமுகம் கொடுப்பதற்காக வந்தேனே தவிர சந்திப்பில் கலந்து கொள்ள வரவில்லை எனவும் தெரிவித்தார். உங்களை அனுப்ப அரசு தீர்மானித்ததா, அல்லது நீங்களாகவே வருவதற்கு முடிவு செய்தீர்களா எனக் கேட் டதிற்கு சிரித்தபடி, "அரசே இதைச் செய்தது; இதன் தொடர்பாகவே ஜனாதிபதியின் செயலாளரும், சமாதானக் குழுவின் தலைவருமான பலபத்த பெந்தி என்னை, பயணத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிவித்தார்.

குறிப்பாக, தென்பகுதியில் செய்தித்தாளில் வெளிவரும் செய்திகளில் பெரிய அளவில் உண்மை இல்லை என்றும், அதனை அரசின் முடிவாகக் கருத முடியாது" எனவும் கூறினார். அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புக் கூட்டத்தில் தான் கலந்து கொள்ளவில்லை என்றும், எனவே அதில் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் தெரியாது என்றும், இங்கு நடைபெற்ற சம்பவங்களின் தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளரிடம், தான் தெளிவான விளக்கம் ஒன்றை அளிக்க இருப்பதாகவும் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியைச் சந்திப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அண்மையில் 870 இராணுவத்தினர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்; இது இந்த நேரத்தில் முறையான நடவடிக்கையென நீங்கள் கருதுகிறீர்களா? என்று கேட்டதற்கு, "இராணுவத்தின் நடவடிக்கை என இதைக் கருத முடியாது ; ஏனெனில் சாதாரண நிலையில் கூட ஒரு இராணுவத்தை ஒரு நாடு பராமரிக்க வேண்டும். இதில், பரிசு பெற்றவர்களாக 6 மாதங்கள் வடக்கு -கிழக்கில் கடமையாற்றியவர் கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவ்வளவு தான்" என்றார். பொருள்கள் மீதான தடை தொடர்பாக அரசு மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தற்போது வவுனியாவில் இருந்து பல லொறிகள் வட பகுதிக்கு வருவதாகவும் வெகுவிரைவில் இன்னும் பல பொருள்களை, கப்பல் மூலமாகவும் தரை வழி மூலமாகவும் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும் கூறினார்.

யாழ் வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். இவர்கள் கண்காணிப்புக் குழுவில் கடமையாற்ற உள்ளனர். இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் இப்பிரதிநிதிகளை அறிமுகம் செய்து வைத்தனர். இதனை அடுத்து அவர்கள் சிறிது நேரம் கலந்துரையாடினர்.

யாழ். மாவட்டத்திற்கான கண்காணிப்புக் குழுத் தலைவர், யாழ்ப்பாணத்திற்கு வரவிருப்பதாகவும் இவர் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே நிலையான, தெளிவான விதிமுறைகள் ஏற்படும் வரை முழுமையாகக் கடமையில் இயங்கமாட்டார் எனவும் தெரியவருகிறது. இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரையில் யாழ் நிலைமைகள் தொடர்பாக ஆராயவிருப்பதாகவும், இவர் சிறீலங்கா அரசுடன் ஏற்படுத்த வேண்டிய தொடர்புகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக மேற்கொள்வார் எனவும் தெரிய வருகின்றது. இவரின் அலுவலகம் விடுதலைப் புலிகளின் அலுவலகங் களில் அமையாது எனவும் பெரும்பாலும் உல்லாசப் பயணிகள் விடுதிகள் ஒன்றிலேயே காரியாலயம் அமைவதற்குச் சாத்தியக்கூறுகள் பெருமளவு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

"சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகள், காலையில் வந்து மாலையில் அவசரப்பட்டு திரும்பிச் செல்வதினாலும் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வருவதாலும் இங்கு பல சிக்கல்கள் உருவாகின்றன; ஆகவே அவர்கள் யாழ்ப்பாணம் வந்தால் 2 -3 நாட்கள் தங்கி எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் பேசிச்

www.tamilarangam.net



செல்லவேண்டும்". இவ்வாறு கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளுடன் வருகை தந்திருந்த பிரிகேடியர் பீரிசிடம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அடுத்த கட்டப் பேச்சை விரைவாக நடாத்தி, இந்தத் தாக்குதல் தவிர்ப்பு சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்து, கண்காணிப்புக் குழுக்களை முழுமையாக இயங்க வைக்க வேண்டும் என்று அவரிடம் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் யாழ் வந்து சேர்ந்ததும் விடுதலைப் புலிகள் மகிழ்ச்சியான, மகத்தான வரவேற்பையளித்தனர். சிறீலங்கா விமானப்படையைச் சேர்ந்த 541 பெல் ரக உலங்கு வானூர்தியில் காலை 10.20 மணியளவில் பரியோவான் கல்லூரி மைதானத்தில் கண்காணிப்புக் குழு வந்து இறங்கியது. இவர்களை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப் பாளர் தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் வரவேற்றனர். இந்த நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கான இலங்கைப் பிரதிநிதி, யாழ் பிரதிநிதி ஆகியோரும் கலந்து கொண்டனர். இவர்கள் அங்கிருந்து விடுதலைப் புலிகளின் விசேட வாகன அணியின் பாதுகாப்புடன் அரசியல்துறை செயலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் 10.50 மணிக்கு பேச்சுக்கள் நடைபெறும் மண்டபத்திற்குள் நுழைந்ததும், அங்கு நின்ற புகைப்படப் பிடிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர் கள் நிகழ்வுகளைப் பதிவு செய்யப் பேச்சுக்கள் தொடங்கின.

"மோதல்தவிர்ப்பு சம்பந்தமாக மேலும் சில விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் பேசி இணக்கம் காண வேண்டியுள்ளது; அந்த இணக்கப்பாடு ஒரு ஆவணமாக ஆக்கப்பட்டு அதில் இரு தரப்புப் பிரதிநிதிகளும் கைச்சாத்திட்ட பின்பே கண்காணிப்புக் குழு முழுமையாக செயல்படத் தொடங்கும்" என திரு அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "ஏற்கனவே பிரபாவும், சந்திரிகாவும் செய்து கொண்ட ஒப்பந்தமானது மிகவும் சுருக்கமானது; இதில் வட-கிழக்கில் ஏற்படக்கூடிய ஏராளமான பிரச்சினைகளுக்கு விளக்கங்கள் இல்லை. ஆகவே நாம் அந்த விளக்கங்கள் பற்றி கதைத்து, இன்னும் ஒரு உடன்பாடு செய்து, அதில் இருதரப்பும் கைச்சாத்திட்ட பின்தான், கண்காணிப் புக் குழுக்கள் முழுமையாக இயங்க முடியும். கிழக்கில் சிக்கல் அதிகம். ஏனென்றால் கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே பல பிரச்சினைகள் தோன்றி இருக்கின்றன. அதாவது, எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட முடியாது என்று சிங்கள இராணுவம் சொல்கின்றது. அடுத்ததாக, கடலில் மீன் பிடிக்கும் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும். மீனவ சமூகம் கடலில் சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மீது சோதனை, துன்புறுத்தல் கள் இப்படியான பல நடவடிக்கைகளை இராணுவம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. இப்படியான பிரச்சினைகள் பற்றி விரிவாகக் கதைத்து, ஒரு தெளிவான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும். இதன்படிதான் கண்காணிப்புக் குழு இயங்க முடியும் என்ற எமது கருத்தை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர். தற்போது உள்ள உடன்பாட்டில் நடைமுறையில் செய்யக்கூடிய விடயங்கள் ஏதும் தெளிவாக இல்லை. ஆகவே இரு தரப்புக்களும் விளக்கங்கள் தர வேண்டும். உடன்பாடு செய்ய வேண்டும். இரு வாரங்களுக்குள் செய்ய வேண்டும் என்றே வெளிநாட் டுப் பிரதிநிதிகள் விரும்புகின்றார்கள். அப்படியான உடன்பாடு இல்லாமல் சரியாக செயற்பட முடியாது என்கிறார்கள். அதுவரையும் குழுக்களை, செயற்பட வேண்டாம் என நாம் கூறவில்லை. அவர்கள் அதுவரை இங்குள்ள நிலைமைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளலாம். இடங்களைச் சுற்றி பார்க்கலாம், இருக்கும் நிலைமைகளை அவர்கள் அவதானிக்கலாம்.

ஒப்பந்தத்தின்படி ஆறு குழுக்கள் ஆறு மாவட்டங்களுக்குத் தேவையென முன்பே தெரியும். யாழ், மன்னார், முல்லை, வவுனியா, திரிகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் இக்குழுக்கள் செயற்பட வேண்டும். ஆனால் நான்கு பிரதிநிதிகளே வெளிநாட்டில் இருந்து வந்துள்ள னர். சிறீலங்கா அரசு நான்கு பேர் போதுமெனக் கூறியுள்ளது. நாம் ஆறு பேர் வேண்டுமெனக் கூறியுள்ளோம். ஆதலால் மேலும் 2 பேர் வரவேண்டும். நோர்வேயில் இருந்து இருவர் வந்துள்ளனர். இதே மாதிரி கனடாவிலும், நெதர்லாந்திலும் இருந்து, இன்னுமொருவர் வரலாம் என்று பிரதிநிதிகள் கூறுகின்றார்கள். எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலேயே அவர்களின் காரியாலயங்கள் இயங்கும் எனக் கூறியுள்ளோம்.

வெளியிலிருந்து செய்தியாளர்கள் எவரும் இம்முறை வரவில்லை. இதே வேளையில் ரூபவாகினியில் இருந்து படப்பிடிப்பிற்கும் ஒருவரும் வரவில்லை. கொழும்பில் இருந்து தூதுக்குழுக்கள் வரும்போது தகவல் சேர்க்க என்று பல பேர் வருவது குறிப்பிடத்தக்கது. ■

www.tamilarangam.net

# மக்களின் இன்னல்கள் முதலில் தீர வேண்டும் தலைவர் பிரபாகரன் சிறீலங்கா அரசிற்கு கடிதம்.

## ( இக்கடிதம் 21.12.94 இல் எழுதப்பட்டது. )

**அன்பின் கேணல் ரத்வத்தவிற்கு!**

*19.12.94 திகதியிடப்பட்டுள்ள உங்கள் கடிதத்திற்கு மிகவும் நன்றி. உங்கள் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக குறிப்பிட்ட திகதிக்கு மறுதினமே எமக்குக் கிடைத்தது. 08.12.94, 15.12.94 ஆகிய தினங்களில் நாம் உங்களுக்கு அனுப்பி வைத்த கடிதங்களில் நீங்கள் எழுதிய கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்களை அளித்திருந்தோம். மோதல் நடவடிக்கையை இடை நிறுத்துவது சம்பந்தமான உங்கள் யோசனைக்கு நாம் சமாதான முறையில் இணக்கம் தெரிவித் தோம். அத்துடன், மோதல் இடை நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகள் பற்றி, பேச்சுக்கள் நடா த்த இணங்கினோம். சமாதானப் பேச்சுக்கள், சமாதானத் தீர்வு, உடனே நடைபெற வேண்டுமென்ற கருத்தையும் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள். எமது கருத்தை வரவேற்றே, நடவடிக்கைகள் தொடரும் சூழ்நிலையில் அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்துவது உகந்ததல்ல எனவும் 13.12.94 இல் எழுதிய கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். நாம் சமாதானத்தை விரும்புகின்றோம் என்றும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் இன நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டு நிரந்தர சமாதானம் தோன்ற வேண்டுமெனவும் நாம் நம்புகின்றோம் என்றும் 18.12.94 இல் எழுதியிருந்த கடிதத்தில் மிகத் தெளிவாக வலியுறுத்தி இருந்தோம். மோதல் நிலையை நிறுத்துவது சம்பந்தமான பேச்சுக்கள் ஆரம்பமாகும் என நாம் எதிர்பார்த் தோம். தமிழ் மக்களின் மிக அவசரமான அன்றாடப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென நாம் ஆரம்பகட்டப் பேச்சுக்களின் போது அழுத்திக் கூறியிருந்தது மாத்திரமின்றி, திரும்பத் திரும்ப வலியுறுத்தி இருந்தோம். உங்கள் ஞாபகத்தை புதுப்பித்து இந்த விடயத்தை மேலும் தெரியப்படுத்தும் நோக்கில் 08.12.94 இல் நாம் அனுப்பிய கடிதத்தில் சில பதில்களை மேற்கண்டவாறு தெரிவித்தோம். ஆரம்பக் கட்ட பேச்சுக்களில் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு முதன்மை அளிக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். முதற் கட்டப் பேச்சுக்களின் போது எமது குழு, இந்தப் பிரச்சினைகள் என்ன என்று தெரியப்படுத்தியது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் முந்திய அரசின் இராணுவவாத அணுகுமுறையால் சிருஸ்டிக்கப்பட்டவைகளாகும். தமிழ் மக்கள் சாதாரணமாக எதிர் நோக்கும் அவலங்கள் தீர்த்து வைக்கப்படும் என அரச தூதுக்குழுவினர் வாக்குறுதி அளித்தும், இதுவரை எவ்வித உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.*

ஒரு உண்மையான சமாதானக் கொள்கையும், இயல்பு நிலையும் தோற்றுவிக்கப்பட வேண்டுமாயின், எமது மக்கள் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட அவலமான பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும். எமது மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்ட பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வின் அடிப்படைகள் பற்றி ஆராய வேண்டும் என்பதையும் நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். நாம் ஒரு விடயத்தை மிக ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றோம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நான் நம்புகின்றேன். அதாவது போரின் மூலவேர்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு முன்னராக எமது மக்கள் மீது, ஏவிவிடப்பட்ட போர் நடவடிக்கைகளின் நேரடி விளைவாக உருவாகியுள்ள பாரதூரமான பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காண வேண்டும். முதற் கட்டப் பேச்சுவார்த்தைகளில் இவ்விதமான பிரச்சினைகள் பற்றியே கவனம் செலுத்தப்பட்டது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மக்கள் நாளாந்தம் எதிர் கொள்ளும் அவலமான துன்பங்களை தீர்த்து வைக்குமாறு பிரதம மந்திரியால் எமக்கு ஆணை தரப்பட்டிருக்கிறது என அரச தூதுக் குழுவின் தலைவர் திரு. பலபத்த பெந்தி கூறியிருந்தார். தமிழ் மக்களின் நல்வாழ்வைப் பேணும் சகல தேவைகளையும் உடன்பாடுகளையும் மக்களுக்கு உவந்தளிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்த போதும் இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி கருத்தளிக்கப்படும் என நாம் எதிர்பார்த்தோம். எமது கருத்துக்களையும் எமது அக்கறைகளையும் ஏற்றுக்கொண்டிருப்பது போல் நீங்களும் எழுதியிருக்கின்றீர்கள். 13.12.94 இல் நீங்கள் எழுதிய கடிதத்தில், "தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து நாம் மிகவும் அக்கறை கொண்டிருக்கின்றோம் என்பதையும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பைத் தருவதோடு எமது சக்திக்கு ஏற்ப முழுமையாக உதவி தருகின்றோம் என்றும் உங்களுக்கு உறுதி அளிக்கின்றோம்" எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். எமது நிலைப்பாட்டை பற்றி தெளிவான விளக்கங்களை தெரிந்து கொண்டது மட்டுமின்றி எமது மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு டனடியாகப் பரிகாரம் காணப்படும் என உறுதியளித்துவிட்டு 19.12.94 இல் நீங்கள் எழுதியிருக்கும் கடிதத்தில் சமாதானப் பேச்சுக்கள், போர் நிறுத்தம் மற்றும் போர் நெருக்கடியைத் தீர்க்கும் பேச்சுக்கு மட்டும் முடிவு தரவேண்டுமென நீங்கள் குறிப்பிட்டிருப்பது எமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. இதிலிருந்து உங்கள் நிலைப்பாட்டில் ஒரு குறிப்பிட்டமாற்றத்தை நாம் கவனிக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, எமது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளை ஓரம் கட்டி விடும் திட்டமிட்ட நோக்கமுடன் இந்த மாற்று வழியை நீங்கள் கடைப்பிடிப்பதாக எமக்குப் புலப்படுகின்றது. போர் நெருக்கடியின் தோற்றுவாய்களை ஆராய்ந்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சமாதான வழிமுறைக்கு ஒட்டு மொத்தமான நோக்கமாக அமைய வேண்டும் என்பதை நாம் தெளிவான பாதையாக எண்ணுகின்றோம். இந்த அடிப்படை விசயத்தில் எமக்கு கருத்து முரண்பாடு இல்லை. ஆயினும், நாம் உங்களுக்கு எதை வலியுறுத்த விரும்புகின்றோம் என்றால்... பேச்சுவார்த்தைக்கான வழிமுறை கட்டம் கட்டமாக முன்னோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்பதேயாகும். ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகள் எமது மக்கள் எ திர்கொள்ளும் துன்பங்களையும் அன்றாடப் பிரச்சினைகளையும் தீர்ப்பதாக அமைய வேண்டும்.

இயல்பு நிலையையும் சமாதான சூழ்நிலையையும் தோற்றுவிப்பதற்கு இது அத்தியாவசியமானதாகும். இதுதான் தமிழீழ மக்களின் ஒட்டுமொத்தமான அபிலாசையாகும். தம்மை அழுத்தும் நாளாந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுவதையே மக்கள் விரும்புகின்றனர். முதற்கட்ட பேச்சுக்கள் இந்தக் குறிக்கோள்களில் அமையப்பட்டிருந்தாலும், அவசரமான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்போவதாக அரசியல் வாக்குறுதி அளித்திருந்தாலும், இன்றைய அரசு தனது வாக்குறுதி களை நிறைவு செய்யும் என எமது மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுகிறது. எனவே அன்றாடப் பிரச்சினைகளை மூடி மறைக்கவோ அல்லது ஓரங்கட்டி விடவோ அரசு முயற்சிக்குமானால், அதை ஒரு அரசியல் ஏமாற்ற நிலையாகவே எமது மக்கள் கருத இடமுண்டு. எமது நிலைப்பாட்டை நாம் போதுமான அளவு விளக்கியிருக்கின்றோம். எமது நிலைப்பாடு நேர்மையானதும் நியாயமானதும் ஆகும். நடைமுறை சாத்தியமானது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின் றோம். நாம் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதிலும் எமது சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன என்பதையும் நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். உங்களுக்கு வசதியான எந்த நேரத்திலும் அரச தூதுக் குழுவை நீங்கள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கலாம். அவர்களை வரவேற்கத் தயாராகவே இருக்கின்றோம்.

**வே. பிரபாகரன்**
**தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்